# OS.No.50/2025, Dated 18.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026.

**வா.சா.1 – கிருஷ்ணமூர்த்தி த/பெ. கோவிந்தன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எதுவும் படிக்கவில்லை. விவசாய வேலை செய்து வருகிறேன். நான் சொல்லி தான் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். எனது சொந்த ஊர் அரசம்பட்டு ஆகும். நான் 1/4 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3 1/2 ஏக்கர் மற்றும் 1 ஏக்கர் 20 செண்டு மற்றும் 60 செண்டு ஆகியவை எங்களுடைய குடும்ப சொத்தாகும். இந்த நிலங்களுக்கு கிணறு மற்றும் பம்பு செட்டு உள்ளது. எனது தந்தை பெயரிலும், எனது தாயார் பெயரிலும் மின் இணைப்பு உள்ளது. எனது பெற்றோருக்கு ஜோதி, சின்னபையன், ராஜம்மாள் மற்றும் நான் ஆகியோர் மட்டுமே வாரிசுகள் ஆவோம். நான் எனது பெற்றோரின் கடைசி மகன் ஆவேன். எனக்கு என்னுடைய பிறந்த வருடம் தெரியவில்லை. 2, 3 பிரதிவாதிகளும், வாழப்பந்தல் கூட்ரோட்டில் குடியிருக்கிறார்கள். எங்கள் குடும்பத்திற்கு என்று சொந்தமாக வீடு இல்லை. அவரவர்கள் வீடு கட்டிக்கொண்டது தான். நான் காலி மனை மற்றும் நிலத்தில் பாகம் கேட்டு தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்ள் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நானும், 2, 3 பிரதிவாதிகளும் எங்களுது திருமணத்திற்கு முன்பு ஒன்றாகதான் இருந்தோம். எனக்கு திருமணம் ஆகும் வரை நாங்கள் ஒன்றாக தான் இருந்தோம். எனக்கு திருமணம் ஆகி எந்த வருடம் நான் பிரிந்து சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் தனியாக செல்லும்போது நகை மற்றும் பணம் பொது குடும்ப சொத்தாக இருந்ததா என்றால் இல்லை. பொது கடன் எதாவது எங்கள் குடும்பத்திற்கு இருந்ததா என்றால் இல்லை. நான் 7 அயிட்டமாக தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள்

நான் மேலே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தான். தாவா 2 வது அயிட்ட சொத்து காலி மனையில் முன்புறம் வீடு கட்டியுள்ளோம். பின்புறம் காலி மனை உள்ளது. நான் மற்றும் 2, 3 பிரதிவாதிகளும் தனித்தனியாக வீடு கட்டியுள்ளோம். எனது தகப்பனாரின் 1வது அயிட்ட சொத்தில் 3 1/2 ஏக்கர் உள்ளது. அதில் 3HP மோட்டார் ஒன்று உள்ளது. அந்த மின் இணைப்பு எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது. அந்த சொத்து எனது தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்துதான். 1வது அயிட்ட சொத்து வாங்குவதற்கு முன்பே நான் பிறந்துவிட்டேன். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2001ம் ஆண்டு இறந்தார். அவர் இருக்கும் வரை நாங்கள் கூட்டுக்குடும்பமாகதான் இருந்தோம். 2 வது அயிட்ட சொத்து காலி மனையாக தான் வாங்கப்பட்டது. நான் வீடு கட்டியுள்ள காலி மனையின் மதிப்பு எனக்கு தெரியாது. 3, 4 அயிட்ட சொத்துக்கள் சோழவரம் எல்லையில் உள்ளது என்றால் சரிதான். 5, 6 அயிட்ட சொத்துக்கள் மற்றும் 7வது அயிட்ட சொத்துக்கள் எனது தாயாருக்கும் பாத்தியமானது என்றால் சரிதான். எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து பட்டா எண்.16 ஆகும். 7வது அயிட்ட சொத்து எனது தாயார் பெயருடன் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.18 14:18:58 +0530

சார்புநீதிபதி

வந்தவாசி